0834

AL/2014/29/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I
Communication and Media Studies I

29 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத்** தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத்** தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X)** இடுவதன் மூலம் காட்டுக.

1. நவீன வெகுசன ஊடகங்களின் தொழினுட்பக் கட்டுமானத்தின் முன்னோடி
(1) அலெக்சாண்டர் கிரஹம் பெல் (2) சாய் லூன் (Tsai Lun)
(3) ஜோஹானஸ் குட்டன் பேர்க் (4) மார்ஷல் மெக்லுகான்
(5) தோமஸ் அல்வா எடிசன்

2. அனுப்புநர் மற்றும் பெறுநரின் பண்புகளை, ஐந்து அம்சங்களின் அடிப்படையில் விபரிக்கும் தொடர்பாடல் மாதிரி
(1) வில்பர் ஷ்ராம் மாதிரி (2) டேவிட் கே. பேர்லோ மாதிரி
(3) ஹரோல்ட் டீ. லாஸ்வெல் மாதிரி (4) குளோட் ஷெனொன் மற்றும் வொரன் லீவர் மாதிரி
(5) ஷ்ராம் - ஒஸ்குட் மாதிரி

3. வெளிநிலை (external) கருவிகள் **தேவைப்படாத** தொடர்பாடல் வகை
(1) ஆளிடைத் தொடர்பாடல் (2) தனியாள் (அகமுகி) தொடர்பாடல்
(3) கூட்டுத் தொடர்பாடல் (4) வாய்மொழி அல்லாத் தொடர்பாடல்
(5) முறைசாரா தொடர்பாடல்

4. தணிக்கை அதி செயற்றிறனுடன் நடைமுறைப்படுத்தப்படுவது
(1) தாராண்மைவாதக் கோட்பாட்டில் ஆகும். (2) அதிகார ஆதிக்கக் கோட்பாட்டில் ஆகும்.
(3) சமூகப் பொறுப்புகள் கோட்பாட்டில் ஆகும். (4) சமூக - ஜனநாயகக் கோட்பாட்டில் ஆகும்.
(5) அபிவிருத்திக் கோட்பாட்டில் ஆகும்.

5. பின்வருவனவற்றுள் எது தொடர்பாடலின் அடிப்படைக் கூறாக **அமையாதது** ?
(1) மூலம் (2) இடையூறு (3) பின்னூட்டம்
(4) வாயிற்காப்போர் (5) தொடர்பாடல் வழி (channel)

6. பின்வருவனவற்றுள் எது ஞாபகத்தில் சேமிப்பது தொடர்பில் முக்கியமான அம்சமாக **அமையாதது** ?
(1) கற்பனை (2) மீள நினைவூட்டல் (3) பயிற்சி
(4) அழுத்திச் சொல்லல் (5) பிரயோகம்

7. தகவலின் குறிமுறையவிழ்த்தல் என்பது தொடர்பாடல் செயன்முறையின் அவசியமான கூறாக முதன்முதலில் அடையாளப்படுத்தப்பட்டது,
(1) ஷெனொன் மற்றும் லீவரால் (2) அலெக்சாண்டர் கிரஹம் பெல்லினால்
(3) ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லினால் (4) மார்ஷல் மெக்லுகானினால்
(5) ஆதர் சீ. கிளார்க்கினால்

8. "பண்பாடு என்பது ஒரு குறித்த சமூகத்தினால் பகிரப்பட்ட மற்றும் ஊடுகடத்தப்பட்ட அங்கத்துவக் கூறுகளான கற்றுக்கொண்ட நடத்தைகள் மற்றும் நடத்தைகளின் பெறுபேறுகளின் உருவமாக அமைவது" எனக் கூறியவர்
(1) காஸ்பர் மாலினோவ்ஸ்கி (2) எட்வேர்ட் ரெய்லர் (3) ரால்ப் லின்ரன்
(4) ஆனந்த குமாரசுவாமி (5) ரேமண்ட் வில்லியம்ஸ்

9. அபிவிருத்தித் தொடர்பாடல் செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்தும்போது ஆரம்ப நிலையில் கவனம் செலுத்த வேண்டியது
(1) தகவல் திரட்டல் முறைமைகள் பற்றியதாகும். (2) தேவைப்படும் நிதி வளங்கள் பற்றியதாகும்.
(3) கால வரையறை பற்றியதாகும். (4) பிரச்சினையை அடையாளம் காணுதல் பற்றியதாகும்.
(5) சமூகத்தின் பங்களிப்பு பற்றியதாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

10. சுய எண்ணக்கரு (self concept) என்பது,
(1) ஒருவர் தொடர்பில் ஏனையவர்களிடம் உருவாக்கப்படும் ஒரு வலுவான சிந்தனை
(2) ஒருவர் தொடர்பிலான ஓப்பீட்டளவில் உறுதியான பார்வை நோக்கு (perception)
(3) ஒருவர் தொடர்பில் ஏனையவர்கள் மேற்கொண்ட கணிப்பீடு
(4) ஒருவர் கொண்டுள்ள சுயம் தொடர்பிலான தொடர்ந்து மாற்றமடையும் அபிப்பிராயம்
(5) ஒருவர் தொடர்பில் சுயமாக உருவாக்கப்படும் பிரதிமை (image)

11. குறியீடுகள் (symbols) எனப்படுவன,
(1) பெரும்பான்மையான மக்களிடம் ஒரே அர்த்தத்தை உருவாக்குபவை.
(2) இன்னுமொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்பவை.
(3) வாய்மொழியல்லாத் தொடர்பாடலுடன் தொடர்புடையவை.
(4) மக்களையன்றி, சிந்தனைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துபவை.
(5) பேச்சுத் தொடர்பாடலிலிருந்து (oral communication) வேறானவை.

12. புத்தகம் ஒன்றை வாசித்த கமலா, தான் சந்தித்த பரிச்சயமற்ற வார்த்தையொன்றுக்கான அர்த்தத்தைத் தெரிந்துகொள்ள அகராதியின் துணையைப் பெற்றுக்கொண்டார். இது,
(1) மொழிப்பெயர்ப்புக்கான ஓர் எடுத்துக்காட்டு (2) ஒரு குறிமுறையவிழ்ப்புச் சந்தர்ப்பம்
(3) ஓர் இருவழிச் செயன்முறை (4) ஒரு விளக்கம்கொள் முறைமை (interpretation)
(5) ஒரு பார்வைநோக்கு

13. தொடர்பாடல் நேர்வழியில் (linear) நடைபெறும்போது இடம்பெறுவன
(1) அனுப்புநர், சாதனம் (medium), விளைவு, பெறுநர்
(2) மூலம், வழி, குறிமுறையாக்கல், எதிர்வினை (response)
(3) அனுப்புநர், இடையூறு, பின்னூட்டம், விளைவு (effect)
(4) அனுப்புநர், பெறுநர், மூலம், சாதனம்
(5) அனுப்புநர், செய்தி, சாதனம், பெறுநர்

14. வெகுசன ஊடக வழித் தொடர்பாடலில் அவசியமான கூறாக **அமையாதது**
(1) வாயிற்காத்தல் செயற்பாடு (2) தொழினுட்பக் கருவிகளைப் பயன்படுத்துதல்
(3) இருவழிச் செயன்முறையாக இருத்தல் (4) பொதுச் செய்திகளின் பரவுகை
(5) மேலாளுகையுடனான கட்டமைப்பு (hierarchy)

15. எந்த தொடர்பாடல் கோட்பாடு, ஊடகவியலாளர்கள் ஆட்சி முறைமையுடன் இணக்கமாகப் பணியாற்றும் சந்தர்ப்பங்களில் எப்போதும் காணக்கிடைக்கக் கூடியதாகவிருக்கும் ?
(1) சமூகப் பொறுப்புக் கோட்பாடு (2) ஜனநாயகக் கோட்பாடு
(3) தூராண்மைவாதக் கோட்பாடு (4) அதிகார ஆதிக்கக் கோட்பாடு
(5) சோவியத் கம்யூனிஸ்ட் கோட்பாடு

16. பின்வரும் கூற்றுகளில் மானுடத் தொடர்பாடலுடன் **தொடர்பற்றது** எது ?
(1) வாய்மொழியல்லாத் தொடர்பாடல் அதிகம் பயன்படுத்தப்படும்.
(2) ஒரே நேரத்தில் பல்வேறு தொடர்பாடல் வழிகள் பயன்படுத்தப்படும்.
(3) நிகழ்காலத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது.
(4) பண்பாட்டின் ஆளுகைக்குட்பட்டது.
(5) சூழமைவுக்கேற்ப மாற்றம் கொள்வது.

17. வெகுசன ஊடகங்கள் மூலமாக வெளியிடப்படுகின்ற தகவல்கள் தொடர்பான முடிவுகளை மேற்கொள்வோர்
(1) உரிமையாளர்கள் (2) ஆசிரியர்கள் (Editors) (3) செய்தியாளர்கள்
(4) வாயிற்காப்பாளர்கள் (5) தகைமை வாய்ந்த அதிகாரிகள்

18. பின்வரும் பிரச்சினைகளில் எது மொழி தொடர்பான இடையூறு ஏற்பட முக்கிய அம்சமாக அமையக்கூடியது ?
(1) செய்திகளின் கடத்துகை (2) தொடர்பாடல் வழி பற்றிய தீர்மானம்
(3) குறியீடுகளின் தெரிவு (4) தொழினுட்பத் தடைகள்
(5) பெறுநர்களின் பலவீனம்

19. பின்வருவனவற்றுள் **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பேச்சுத் தொடர்பாடல் (oral communication), வாய்மொழித் தொடர்பாடல் (verbal communication) முறைகளை உள்ளடக்கி இருக்கலாம்.
(2) எழுத்துமூலத் தொடர்பாடல், வாய்மொழியல்லாத் தொடர்பாடல் முறைகளை உள்ளடக்கியிருக்கலாம்.
(3) பேச்சுத் தொடர்பாடல், வாய்மொழியல்லாத் தொடர்பாடல் முறைகளை உள்ளடக்கியிருக்கலாம்.
(4) எழுத்துமூலத் தொடர்பாடல், வாய்மொழித் தொடர்பாடல் முறைகளை உள்ளடக்கியிருக்கலாம்.
(5) எழுத்துமூலத் தொடர்பாடல், பேச்சுத் தொடர்பாடல் முறைகளை உள்ளடக்கியிருக்கலாம்.

20. "ஊடக எழுத்தறிவு என்பது ஊடக உள்ளடக்கம் ஒன்றை அணுகக்கூடிய, புரிந்துகொள்ளக் கூடிய, விமர்சன ரீதியாக மதிப்பிடக்கூடிய மற்றும் அதனை உருவாக்கக்கூடிய வல்லமையாகும்" எனக் கூறியவர்,
(1) வில்பர் ஷ்ராம் (2) ஜேம்ஸ் போட்டர்
(3) அமெரிக்கத் தொடர்பாடல் ஆணைக்குழு (4) ஐரோப்பிய ஆணைக்குழு
(5) மக்ப்ரைட் அறிக்கை

[பக். 3 ஐப் பார்க்க

21. பின்வருவனவற்றுள் **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
    (1) உண்மையான தொடர்பாடல் தொழினுட்பம் என்பது எப்போதும் பிரயோகத் தொழினுட்பத்திலும் முன்னிலையில் இருக்கும்.
    (2) தொடர்பாடல் தொழினுட்பத்தின் அபிவிருத்தியானது, பல்வேறு தொடர்பாடல் வகைகளில் உள்ளுறைந்திருந்த வேறுபாடுகளை அகற்றும் விளைவாகும்.
    (3) பிரசைகள் ஊடகங்கள் (citizen media) நவீன தொடர்பாடல் தொழினுட்பத்தின் சாதாரண பக்கவிளைவாகும்.
    (4) சகல தொடர்பாடல் வகைகளிலும், தொழினுட்பக் கருவிகள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ பயன்படுத்தப்படுகின்றன என்பதை இன்று சாதாரணமாகவே உணரக் கூடியதாக இருக்கிறது.
    (5) தொடர்பாடல் தொழினுட்பத்தில் துரிதமாக இடம்பெற்று வருகின்ற மாற்றம், தற்போதைய ஊடகப் பாவனை குறித்து ஆழமான ஆய்வுகள் மேற்கொள்வதை அதிக கடினம் ஆக்கியிருக்கிறது.

22. ஊரகத் தொடர்பாடலில் (rural communication) பாரம்பரிய ஊடகங்களைப் பயன்படுத்துவதன் நன்மை, பெறுநர்களுடனான வினைத்திறன் மிக்க தொடர்பாடலை உறுதிப்படுத்துவதாக அமைந்திருத்தலாகும். பின்வருவனவற்றுள் பெறுநரின் பங்களிப்பை ஊக்கப்படுத்துவதுடன் **தொடர்பற்றது** எது ?
    (1) பிரதேச மொழிகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் புரிந்துகொள்ளல் ஆகும்.
    (2) இருவழித் தொடர்பாடல் செயன்முறையை நடாத்திச் செல்லுதல் ஆகும்.
    (3) பெறுநர் கொண்டுள்ள அனுபவக் களத்தைப் (field of experience) புரிந்துகொள்ளல் ஆகும்.
    (4) பெறுநரின் நம்பிக்கைகள் மற்றும் பெறுதிகளுடனான முரண்பாட்டைத் தவிர்த்தல் ஆகும்.
    (5) பெறுநரின் பின்னூட்டத்தை அலட்சியப்படுத்துதல் ஆகும்.

23. பின்வருவனவற்றுள் எது வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையில் வாயிற்காப்பு கருத்துருவாக்கத்தின் பிரயோகத்தில் செல்வாக்குச் **செலுத்தாத** அம்சமாகும் ?
    (1) ஊடக உரிமையாளர் (2) ஊடக அனுசரணை (3) ஊடகக் கட்டுப்பாடு
    (4) ஊடகச் சுதந்திரம் (5) ஊடகப் பண்பாடு

24. பின்வருவனவற்றுள் அகமுகித் தொடர்பாடலுக்கு மிகப் பொருத்தமான உதாரணம்
    (1) கனவு காணுதல் (2) மனச்சாட்சி (3) கோபம்
    (4) ஞாபகப்படுத்திக்கொள்ளல் (5) அனுபவம்

25. வெகுசன ஊடகங்கள் கொண்டுவரும் செய்திகள் பல்வேறு இயல்புகளைக் கொண்டிருக்கும். அவை பொருத்தமாக வகைமாற்றம் செய்யப்படுவதும் புரிந்துகொள்ளப்படுவதும் பெறுநரின்,
    (1) ஊடகப் பார்வை நோக்கத் திறனில் தங்கியிருக்கும்.
    (2) ஊடக விமர்சனத் திறனில் தங்கியிருக்கும்.
    (3) ஊடக எழுத்தறிவுத் திறனில் தங்கியிருக்கும்.
    (4) ஊடக மதிப்பீட்டுத் திறனில் தங்கியிருக்கும்.
    (5) ஊடக ஆய்வுத் திறனில் தங்கியிருக்கும்.

26. வெகுசன ஊடகக் களச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய சில விடயங்களை நேரடியாக அல்லாது மறைமுகமாகவே முன்னெடுத்துச் செல்லும் தேவையுள்ளது. அவ்வாறான சூழல்களுக்குக் காரணமாக அமைவது
    (1) ஒழுக்கநெறி (ethics) (2) கடமைப் பொறுப்பு (responsibility)
    (3) கடமை (duty) (4) நலன்புரிதல் (welfare)
    (5) பொறுப்புக்கூறல் (accountability)

27. புதிய ஊடகங்கள் பரந்து வருவதாலும் அவற்றின் செல்வாக்காலும் இலங்கை மக்களின் வாழ்வில் இன்று குறிப்பிடத்தக்க மாற்றமொன்று இடம்பெற்று வருகிறது. இது பிரதானமாக பின்வரும் எவ்வடிவத்தில் வெளிப்படுகின்றது ?
    (1) பண்பாட்டுப் பரவுகை (cultural diffusion) (2) பண்பாட்டுச் சீரழிவு (cultural deterioration)
    (3) பண்பாட்டு இணைவு (cultural fusion) (4) பண்பாட்டு ஆர்முடுகல் (cultural acceleration)
    (5) பண்பாட்டு ஆக்கிரமிப்பு (cultural invasion)

28. மாற்று ஊடகங்களின் அதிகரித்த பாவனை ஒரு சமூகத்தில் இடம்பெறுவதற்குக் காரணமாவது,
    (1) தீவிரமாகும் அதிகார ஊடகப் போக்குகள்
    (2) சுதந்திர ஊடகப் போக்குகளின் பெருக்கம்
    (3) அதிகமாகும் அபிவிருத்தி நோக்கிய ஊடகப் பாவனை
    (4) புதிய ஊடகங்களின் பெருக்கம்
    (5) எழுத்தறிவில் முன்னேற்றம்

29. வானொலி ஊடகத்தைப் பயன்படுத்துகையில் பின்வரும் பண்புகள் மீது அவசியம் கவனம் செலுத்தப்பட வேண்டுமென நிமால் வகுப்பறையில் தெரிவித்தார்.
    A - வானொலி ஒரு செவிப்புல ஊடகம் B - செம்மையான உயர்குடி மொழியைப் பயன்படுத்துதல்
    C - கற்பனைக்கு இடமளித்தல் D - ஆக்கப்பணிகளுக்கு ஏற்றதான நுட்பங்களைப் பயன்படுத்துதல்
    மேற்குறித்தவற்றில் உண்மையானவை
    (1) A யும் B யும் மாத்திரம் (2) C யும் D யும் மாத்திரம்
    (3) A, B மற்றும் C மாத்திரம் (4) A, C மற்றும் D மாத்திரம்
    (5) B, C மற்றும் D மாத்திரம்

[பக். 4 ஐப் பார்க்க

30. M - ரிப்போட்டர், i - ரிப்போட்டர், U - ரிப்போட்டர் போன்ற செய்தி அறிக்கையிடும் பாணிகள் இடம்பெறுவது,
    (1) 'தற்போது கிடைத்த (breaking) செய்தி' அறிக்கையிடலில்
    (2) உணர்திறன் மிக்க (sensitive) செய்தி அறிக்கையிடலில்
    (3) பிரசைகள் செய்தி அறிக்கையிடலில்
    (4) அபிவிருத்திச் செய்தி அறிக்கையிடலில்
    (5) பிரதேசச் செய்தி அறிக்கையிடலில்

31. தற்கால பூகோளமயமாதலின் முக்கிய இயல்பாக **அமையாதது**
    (1) பண்பாட்டைப் பாதுகாத்தல்
    (2) போட்டி
    (3) தடைகள் அற்ற வர்த்தகம்
    (4) தனியார் வணிகம்
    (5) தேசிய அரசு பலவீனமடைதல்

32. அபிவிருத்தி தொடர்பாடல் பற்றிய சீன மாதிரியின் அடிப்படையில் நான்கு கட்டங்கள் கொண்ட அபிவிருத்தி பின்வருமாறு அமைகிறது.
    A - அறிதல்
    B - பொருள் மதிப்பீடு செய்தல்
    C - தொகுப்பாக்கம்
    D - நிறைவேற்றுதல்
    மேற்குறித்தவற்றில் மிகச் சரியான வரிசைக் கிரமமாக அமையும் பணிகள்
    (1) C, B, D மற்றும் A
    (2) A, C, B மற்றும் D
    (3) C, D, A மற்றும் B
    (4) D, A, B மற்றும் C
    (5) B, C, D மற்றும் A

33. இலங்கையின் நவீன வெகுசன ஊடகப் பண்பாட்டிற்குத் தேவையான பின்னணி உருவாக்கப்பட்டது,
    (1) சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில்
    (2) யுத்தத்திற்குப் பிற்பட்ட காலத்தில்
    (3) காலனித்துவக் காலத்தில்
    (4) காலனித்துவத்துக்குப் பிந்திய காலத்தில்
    (5) பின் - நவீனத்துவக் காலத்தில்

34. பின்வருவனவற்றுள் **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
    (1) கூட்டுத் தொடர்பாடல் நிகழ்வென ஒன்று தீர்மானிக்கப்படுவது பெறுநர்களின் எண்ணிக்கையை மாத்திரம் கொண்டதாகும்.
    (2) சிறிய குழுவுடனான தொடர்பாடலை விடப் பெரிய குழுவுடனான தொடர்பாடலில் தலைமைத்துவ அம்சத்தின் செல்வாக்கு அதிகம் பரீட்சிக்கப்படுகிறது.
    (3) ஒரு குழுவில் கூட்டுத் தொடர்பாடலுடன் ஆட்களிடைத் தொடர்பாடலும் இடம்பெறலாம்.
    (4) ஒரு வழித் தொடர்பாடலாகவோ அல்லது இருவழித் தொடர்பாடலாகவோ கூட்டுத்தொடர்பாடல் இடம்பெற முடியும்.
    (5) ஆட்களிடைத் தொடர்பாடலை விட கூட்டுத்தொடர்பாடலில் தலைமைத்துவ அம்சம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றது.

35. இருபடிநிலைத் தொடர்பாடல் மாதிரியின் அடிப்படையில், கருத்துருவாக்கத் தலைவர்கள் (opinion leaders) பற்றிய **பொருத்தமற்ற** கூற்றாக அமைவது, அவர்கள்
    (1) ஒப்பீட்டு ரீதியில் வெகுசன ஊடகங்களுடன் அதிகம் பரீட்சயம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.
    (2) ஊடகங்களில் இருந்து பெறும் தகவலை கையாளல்கள் இன்றி பெறுநர்களிடம் சேர்ப்பிக்கின்றனர்.
    (3) சமதரத்தில் உள்ளவர்களில் அதிக கௌரவம் பெற்றவர்களாகவும் அறிவார்ந்தவர்களாகவும் உள்ளனர்.
    (4) சம கால நிகழ்வுகளில் அதிக கவனம் கொண்டுள்ளனர்.
    (5) தகவல்களை அனுப்பும்போது பெறுநர்களைக் கிளர்ச்சியுறச் செய்கின்றனர் அல்லது தூண்டுகின்றனர்.

36. பொலிஸாரின் பொதுசனத் தொடர்புச் செயற்பாடுகளின் கீழ் **வரமுடியாத** ஒரு நடவடிக்கையாக அமைவது,
    (1) குற்றங்களைத் தடுக்கும் முறைகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுதல்
    (2) அனர்த்தம் இடம்பெறும் நேரங்களில் பொதுமக்களுக்கு உதவுதல்
    (3) விழாக் காலங்களில் பொதுமக்களின் தேவைகளை நிவர்த்தி செய்தல்
    (4) அரசாங்க அதிகாரிகளுக்கும் மிக முக்கிய பிரமுகர்களுக்கும் பாதுகாப்பு வழங்குதல்
    (5) வீதி ஒழுங்குவிதிகள் தொடர்பில் பாடசாலைச் சிறார்களுக்குச் செயலமர்வுகளை ஒழுங்குசெய்தல்

37. பத்திரிகைகளுக்கும் அரசுக்கும் இடையிலான உறவானது, பத்திரிகைகளுக்கும் வாசகர்களுக்கும் இடையிலான உறவை விட அதிகம் முக்கியத்துவப்படுத்தப்படுவது
    (1) பிரசித்தமான பண்பாட்டில்
    (2) ஹரோல்ட் டீ. லாஸ்வெல் மாதிரியில்
    (3) அதிகார ஆதிக்கக் கோட்பாட்டில்
    (4) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையில்
    (5) பதிப்புத் தொடர்பாடலில்

38. ஒரு நிறுவனத்தின் உள்ளகப் பொதுசனத் தொடர்புகளுடன் தொடர்புடைய குழுவைத் தெரிவுசெய்க.
    (1) செய்திமடல், அறிவிப்புப் பலகை, நலன்புரி அமைப்புகள், சுற்றுலாக்கள்
    (2) அனுசரணை, கண்காட்சிகள், நேரடித் தொலைபேசி இலக்கம், அன்பளிப்பு வழங்குதல்
    (3) அன்பளிப்பு வழங்குதல், செய்திமடல், கண்காட்சிகள், அனுசரணை
    (4) சுற்றுலாக்கள், நேரடித் தொலைபேசி இலக்கம், கண்காட்சிகள், அறிவிப்புப் பலகை
    (5) அனுசரணை, அறிவிப்புப் பலகை, போட்டிகளை ஒழுங்குசெய்தல், கண்காட்சிகள்

[பக். 5 ஐப் பார்க்க

39. வெகுசன ஊடகம்

A - தகவல் தொடர்பாடலுக்கு அவசியம் முன்னுரிமை வழங்க வேண்டும்.

B - பொழுதுபோக்கிற்கு சில இடங்கள் அவசியம் ஒதுக்கப்பட வேண்டும்.

C - பெரும்பாலும் விளம்பரங்களின் அடிப்படையில் அமைவது அவசியம் ஆகும்.

D - நாட்டின் அபிவிருத்திச் செயன்முறைகளுக்கு அவசியம் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

E - சமூகம் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும்.

மேற்குறித்தவற்றில் சரியானவை எவை ?

(1) A, B மற்றும் C மாத்திரம் (2) A, B மற்றும் D மாத்திரம்
(3) A, C மற்றும் E மாத்திரம் (4) A, B, D மற்றும் E மாத்திரம்
(5) A, B, C, D, E ஆகிய அனைத்தும்

40. ஊடகம் வழியாக முன்வைக்கப்படும் தகவல்களின் தன்மை பிரதானமாக,

(1) பகுத்தறிவது ரீதியானதாக அமைவது (2) படைப்பூக்கம் கொண்டதாக அமைவது
(3) உற்பத்தி ரீதியானதாக அமைவது (4) கடத்தும் தன்மையானதாக அமைவது
(5) கற்பனை வளம் கொண்டதாக அமைவது

41. இந்தியர்கள் பயன்படுத்திய சில பாரம்பரிய ,விடயங்கள் பின்வருமாறு:

A - உப்பு B - கைராட்டினம் C - சுவஸ்திகா
D - சுயராஜ்சியம் E - ஓம்காரம்

இவற்றுள் மகாத்மா காந்தியினால் அபிவிருத்தித் தொடர்பாடலுக்கு பயன்படுத்தப்பட்டவை எவை ?

(1) A, B மற்றும் C (2) B, C மற்றும் D (3) A, B மற்றும் D
(4) C, D மற்றும் E (5) B, C மற்றும் E

42. மாற்று வெகுசன் ஊடகத்தின் பண்புகள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றில் முன்வைக்கப்பட்ட சில கருத்துகள் வருமாறு:

A - சிறிய குழுவான பெறுநர்களைக் கொண்டிருக்கும்.

B - புதிய சிந்தனைகளைப் பிரபல்யப்படுத்தும்.

C - பிரதான வெகுசன ஊடகங்களுக்கு சமாந்தரமாக இயங்கும்.

D - இலாபம் சம்பாதித்தல் முக்கிய இலக்காகும்.

E - குறைந்த வசதிகளுடன் இயங்கும்.

மேற்குறித்தவற்றில் மாற்று வெகுசன ஊடகத்துடன் அதிகம் தொடர்புடையவை எவை ?

(1) A, B மற்றும் C (2) A, B மற்றும் D
(3) A, B மற்றும் E (4) B, C மற்றும் D
(5) B, D மற்றும் E

43. அபிவிருத்திக்கும் வெகுசன ஊடகங்களுக்கும் இடையிலான உறவு தொடர்பில் ஆய்வு செய்த டானியல் லேர்னரினால் முன்வைக்கப்பட்ட சிந்தனைகளில் **உள்ளடங்காதது** பின்வருவனவற்றுள் எது ?

(1) நகரமயமாக்கல் (2) எழுத்தறிவு
(3) வெகுசன ஊடகப் பயன்பாடு (4) தேசிய வேலைத்திட்டமொன்றை அமைத்தல்
(5) அரசியல் பங்களிப்பு

44. வாய்மொழியல்லாத் தொடர்பாடலின் முக்கியத்துவம் பற்றிய வகுப்பறைக் கலந்துரையாடல் ஒன்றில் சில யோசனைகள் முன்வைக்கப்பட்டன.

ராஜா - இருவருக்கு இடையேயான உரையாடல் ஒன்றின்போது அடுத்தவரைத் தொடுவது கூட வாய்மொழியல்லாத் தொடர்பாடல் ஆகும்.

கீதா - முகபாவனைகளும் கண்தொடர்பும் கூட முக்கியமானவை.

கமல் - ஆடைகளும் உடற் தோற்றமும் தான் மிக முக்கியமானவையென நான் நினைக்கிறேன்.

ஜானகி - ஆனால், உரையாடலின்போது சொற்களை உச்சரிப்பதும் குரலின் தொனியும் முக்கியமானவை.

மேற்குறித்தவற்றில் வாய்மொழியல்லாத் தொடர்பாடல் பற்றிக் கருத்துத் தெரிவித்தவர்கள்

(1) ராஜா மற்றும் கீதா மாத்திரம் (2) கீதா, கமல் மற்றும் ஜானகி மாத்திரம்
(3) ராஜா, கீதா மற்றும் கமல் மாத்திரம் (4) ராஜா, கமல் மற்றும் ஜானகி மாத்திரம்
(5) ராஜா, கீதா, கமல், ஜானகி ஆகிய அனைவரும்

45. ஆட்சியாளர்கள், மிக முக்கிய பிரமுகர்கள், கலைஞர்கள் ஆகியோரால் இன்றைய நாட்களில் துரிதமான வெகுசனத் தொடர்பு முறையாகப் பயன்படுத்தக்கூடிய மிகப் பொருத்தமான வழிமுறை பின்வருவனவற்றுள் எது ?

(1) பத்திரிகையறிக்கைகளை வெளியிடல் (2) சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துதல்
(3) பத்திரிகையாளர் மாநாடுகளை நடாத்துதல் (4) தொலைக்காட்சி சம்பாஷணைகளை மேற்கொள்ளல்
(5) பொதுக் கூட்டங்களை நடாத்துதல்

[பக். 6 ஐப் பார்க்க

46. பிரதேச செய்தி ஆசிரியரால் பெறப்பட்ட செய்தி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த சில வாக்கியங்கள் கீழே உள்ளன. சரியான வாக்கியத்தைத் தெரிவுசெய்க.
   (1) கலந்துரையாடல் சமீபத்தில் நடைபெற்றன.
   (2) தொலைதொடர்பில் அவர்கள் பின்வருமாறு கருத்துரைக்கப்பட்டனர்.
   (3) சிலர் எதிரான கருத்துகளை வெளியிட்டார்.
   (4) குற்றம் சாட்டப்பட்டவர் வெளிப்படுத்தப்பட மாட்டார்கள்.
   (5) யாரோ ஒருவர் என்னை அவதானித்துக் கொண்டிருக்கிறார்.

47. ஒரு குறித்த கம்பனியின் தொழிற்சங்கம் 100% சம்பள அதிகரிப்பைக் கோரி வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொண்டது. இங்கு 'வெற்றி - வெற்றி' மாதிரிக்கு வலுவூட்டக்கூடிய நடவடிக்கையாக அமையக்கூடியது,
   (1) தொடர்ச்சியான இணக்கப் பேச்சுகள் மூலம் தீர்வொன்றுக்கு வர முயற்சித்தல்
   (2) 50% சதவீத சம்பள அதிகரிப்பு கருத்திற் கொள்ளப்படலாம் என நிர்வாகம் அறிவிப்புச் செய்தல்
   (3) வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படாது என நிர்வாகம் இணக்கத்துக்கு வருதல்
   (4) 35% சதவீத சம்பள அதிகரிப்புடன் பணியாளர்கள் வேலைக்குத் திரும்புதல்
   (5) பணிக்குத் திரும்புபவர்களுக்கு ஒரு சம்பள உயர்ச்சி வழங்க நிர்வாகம் இணங்குதல்

48. அனர்த்த முகாமைத்துவத்தில் ஊடகவியலாளரின் வகிபங்கு தொடர்பில் பாடசாலை ஊடகக் கழகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| ரஹீம் | - | சம்பவம் நடைபெற்ற இடத்தை அடைந்ததும் சம்பவம் தொடர்பில் அடிப்படைக் கணிப்பீடு செய்யப்பட முடியும். |
| ரவி | - | சம்பவம் நிகழ்ந்த இடத்தில் நின்றவர்கள் கண்ணால் கண்ட சாட்சிகளும் அச்சம்பவத்தை விவரிக்கக்கூடியவர்களும் அவசியம் தொடர்புகொள்ளப்பட வேண்டும். |
| ரெஜி | - | இறந்தவர்களினதும் காயமடைந்தவர்களினதும் எண்ணிக்கை ஊடகங்களில் ஒளிபரப்பப்பட முன்னும், பிரசுரிக்கப்பட முன்னும் எப்போதும் குறுக்காய்வு செய்யப்பட வேண்டும். |
| ரொஹான் | - | காயமடைந்தவர்களுக்கும் துன்பத்தில் உள்ளவர்களுக்கும் உதவ முன்பு ஊடகங்களில் தற்போது கிடைத்த செய்தியாக உடனடியாக அந்த விவரங்கள் அறிவிக்கப்பட வேண்டும். |

மேற்குறித்த மாணவர்களில் எவர் தெரிவித்த கருத்துகள் அனர்த்த அறிக்கையிடலில் ஊடகவியலாளர்களின் பொறுப்புடன் தொடர்புபடுகின்றன ?
   (1) ரொஹான், ரெஜி, ரஹீம்
   (2) ரொஹான், ரவி, ரஹீம்
   (3) ரவி, ரெஜி, ரஹீம்
   (4) ரொஹான், ரவி, ரெஜி
   (5) ரொஹான், ரவி, ரெஜி, ரஹீம் ஆகிய அனைவரும்

49. அனர்த்தங்கள் பற்றி அறிவிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய பல்வேறு வழிமுறைகளின் பலம் மற்றும் சவால்களை கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது.

| வழி | பலம் | சவால்கள் |
|---|---|---|
| A | பரந்த வீச்சு | இரவில் அதிகம் பயன்படுத்த முடியாது. |
| B | செய்திகள் துரிதமாகப் பெறப்படும். ஒரு குழுவிற்கு ஒரே தடவையில் அனுப்ப முடியும். | சரியான தகவல் என உறுதிப்படுத்துவதில் பிரச்சினைகள் உள்ளன. |
| C | சரியான தகவலை உறுதிப்படுத்த பல மூலங்களைப் பயன்படுத்த முடியும். | ஒப்பீட்டு ரீதியில் அதிகம் பரவியிருக்கவில்லை. |
| D | இரவில் பயன்படுத்த முடியும். கிராமப் புறங்களில் வினைத்திறன் மிக உயர்வு. | விவரமான செய்தியை வழங்க முடியாது. |

மேற்படி வழிகள் முறையே
   (1) வானொலி மற்றும் தொலைக்காட்சி, குறுஞ்செய்தி (SMS), இணையம், சைரன் (Siren)
   (2) வானொலி மற்றும் தொலைக்காட்சி, இணையம், குறுஞ்செய்தி, சைரன்
   (3) வானொலி மற்றும் தொலைக்காட்சி, சைரன், குறுஞ்செய்தி, இணையம்
   (4) இணையம், வானொலி மற்றும் தொலைக்காட்சி, குறுஞ்செய்தி, சைரன்
   (5) இணையம், சைரன், வானொலி மற்றும் தொலைக்காட்சி, குறுஞ்செய்தி

50. B ← A ← D ← C

மேற்குறித்தது டேவிட் கே. பெர்லோவினால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர்பாடல் மாதிரியாக இருக்குமானால், பின்வரும் கூற்றுகளிலிருந்து **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
   (1) இவற்றில் உறுப்பு ஒன்று குறியீடாக இருக்குமானால் அது நிச்சயம் D ஆகும்.
   (2) அதிகம் ஒத்திசைவான தன்மைகள் C க்கும் B க்கும் இடையில் இருக்கும்.
   (3) குறிமுறையவிழ்ப்பு இருப்பின் அது B இல் நடைபெறும்.
   (4) கண், காது அல்லது மூக்கு A இன் பகுதியாக அமையும்.
   (5) D பற்றிய குறித்த கட்டுப்பாடொன்றை B வைத்துக்கொள்ள முடியும்.

* * *

0834

AL/2014/29/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය II
தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II
Communication & Media Studies II

29 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

**அறிவுறுத்தல்கள்:**

✳ **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **20** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** பாடசாலையில் நடைபெற்ற விரிவுரை ஒன்றில் பின்னாலிருந்த இருக்கைகளில் அமர்ந்திருந்த மாணவர்கள் தமக்குள் கதைத்துக் கொண்டிருந்தபோது, முன் இருக்கைகளில் அமர்ந்திருந்த மாணவர்கள் ஆர்வம் இழந்திருக்கக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(i) குறித்த விரிவுரை வெற்றியளிக்கத் தவறியமைக்கு காரணமாக இருந்திருக்கக்கூடிய விரிவுரையாளரின் **நான்கு** பலவீனங்களைக் குறிப்பிடுக.

(ii) கூட்டுத் தொடர்பாடல் வெற்றிக்குப் பெறுநர்கள் அவசியம் பங்களிக்கக்கூடிய **நான்கு** வழிகளைச் சுருக்கமாக விவரிக்க.

(iii) கூட்டுத் தொடர்பாடல் ஒன்றில் எழக்கூடிய இடையூறுகளின் **இரண்டு** பிரதான வகைகளை உதாரணங்களுடன் விளக்குக.

(iv) கூட்டுத் தொடர்பாடலுக்கும் வெகுசனத் தொடர்பாடலுக்கும் இடையிலான வேறுபாட்டை **நான்கு** அடிப்படை அம்சங்களின் கீழ் விவரிக்குக.

**2.** (i) வாழும் மொழிகளின் **நான்கு** பண்புகளைப் பெயரிடுக.

(ii) ஊடகப் பண்பாட்டின் **நான்கு** பண்புகளைப் பெயரிட்டு, அவற்றுள் **ஒன்று** பற்றிச் சுருக்கமாக விவரித்து எழுதுக.

(iii) வானொலி ஊடகத்தில் மொழி பயன்படுத்தக்கூடிய இரண்டு வழிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை விளக்குக.

(அ) நடித்தல் (ஆ) எழுதுதல்

(iv) வெகுசன ஊடகங்களில் தணிக்கை வெவ்வேறு வடிவங்களில் செயற்படுத்தப்படுகின்றது. அத்தகைய **நான்கு** வடிவங்களைப் பெயர் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** உதாரணங்களுடன் விளக்குக.

**3.** (i) தொடர்பாடலின் **நான்கு** பிரதான நோக்கங்களைப் பெயரிடுக.

(ii) பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றை உள்ளடக்கிய வெகுசன ஊடகங்களில் **இரண்டு** பிரதான வகைகளைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றினதும் பண்புசார் இயல்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(iii) பூகோளமயமாதல் வெகுசன ஊடகங்களின் மீது ஏற்படுத்திய **மூன்று** நேர்த்தன்மையான பாதிப்புகளை (positive impacts) சுருக்கமாக விவரிக்குக.

(iv) பிரசைகள் இதழியல் (citizen journalism) என்பது எதுவென அதன் **நான்கு** பண்புகளின் அடிப்படையில் விவரிக்குக.

**4.** உங்கள் நண்பன் கமல் 'அபிவிருத்தி உத்தியோகத்தர்' பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(i) தேசிய அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு கமல் அவசியம் கவனம் செலுத்த வேண்டிய **நான்கு** விடயப் பரப்புகளைப் பெயரிடுக.

(ii) எவரெட் எம். ரோஜர்ஸ்சினால் பிரேரிக்கப்பட்ட அபிவிருத்தியின் இலக்குகளுக்கு பங்களிக்கக்கூடிய **இரண்டு** உத்திகளைப் பெயரிட்டு, அவற்றுள் **ஓர்** உத்தி எவ்விதம் கமலினால் அவரின் தொழில்சார் களத்தில் நடைமுறைப்படுத்தப்படலாம் என்பதை விவரிக்குக.

(iii) அபிவிருத்தித் தொடர்பாடல் உத்தியாக கமலினால் பயன்படுத்தக்கூடிய **நான்கு** பாரம்பரிய நாட்டரியற் கலைகளைப் பெயரிடுக. அவற்றுள் **இரண்டு** எவ்விதம் அபிவிருத்தித் தொடர்பாடலில் பயன்படுத்தப்பட முடியும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(iv) கமல் தனது அபிவிருத்தி தொடர்பாடல் நிகழ்ச்சிகளில் சமூகத்தின் பங்களிப்பை ஊக்குவிக்கக் கைக்கொள்ளக்கூடிய **நான்கு** வழிமுறைகளைத் தனித்தனியாக விவரிக்குக.

[பக். 2 ஐப் பார்க்க

**5.** திருமணம் ஒன்றுக்காக ஆடை ஒன்றைக் கொள்வனவு செய்ய விரும்பிய வியாபாரியான பிரசன்னா, நீண்டகாலம் பயன்படுத்தக்கூடியதும் விலை கூடியதுமான ஆடை ஒன்றுக்குப் பதிலாக, நீண்டகாலப் பாவனையைத் தராததும் விலை குறைந்ததுமான கவனத்தை ஈர்க்கக்கூடிய ஆடை ஒன்றைக் கொள்வனவு செய்தார்.

(i) மேற்குறித்த தெரிவுக்குப் பிரசன்னாவைக் கொண்டுசெல்ல செல்வாக்குச் செலுத்திய சமூகப் போக்கைப் பெயரிடுக.

(ii) விளம்பரங்கள் மூலம் நுகர்வோர் அடையும் **நான்கு** பயன்களைச் சுருக்கமாக விவரிக்குக.

(iii) ஊடக எழுத்தறிவின் நிலையை உயர்த்துவதன் மூலம் விளம்பரங்களால் உருவாகும் பிரதிகூலங்களை இழிவளவாக்க முடியும். ஊடக எழுத்தறிவை அதன் **மூன்று** பிரதான இயல்புகளின் அடிப்படையில் விவரிக்குக.

(iv) வெளியகப் பொதுசனத் தொடர்பின் **நான்கு** வழிமுறைகளை உதாரணங்களுடன் விளக்குக.

**6.** தேர்தல் காலங்களில் பயன்படுத்தப்படும் வெவ்வேறான அரசியல் பிரசித்தம் (political publicity) தேடும் வழிகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

(i) ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லின் அரசியல் தளத்தைக் கொண்ட தொடர்பாடலுக்கான வரைவிலக்கணத்தை எடுத்துரைக்க.

(ii) மேற்குறித்த கலந்துரையாடல்களில் தேர்தல் பிரசித்தம் தேடும் பரப்புரைகளில் அகமுகித் தொடர்பாடல் மிக முக்கியமானதெனத் தீர்மானிக்கப்பட்டது. அகமுகித் தொடர்பாடலின் வலு பற்றி அதன் **இரண்டு** பண்புகளின் அடிப்படையில் விவரிக்குக.

(iii) தேர்தல் பரப்புரையில் புதிய ஊடகங்களின் பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடல்களில் ஆராயப்பட்டது. இந்த நோக்கத்திற்காக புதிய ஊடகங்கள் பயன்படுத்தப்படக் கூடிய **மூன்று** வழிமுறைகளை விவரிக்குக.

(iv) அரசியல் ஊர்வலம் ஒன்றுக்கான சுவரொட்டி ஒன்றில் அவசியம் உள்ளடக்கப்பட வேண்டிய **நான்கு** விடயங்களைப் பெயரிட்டு, சுவரொட்டிகள் எடுத்துக்கொள்ளும் முக்கியத்துவத்தை **மூன்று** காரணங்களின் அடிப்படையில் விவரிக்குக.

**7.** நேர்முகமான சமூகத் தொடர்பாடல் சூழல் அமைவுக்கு ஒரு நபரின் சரியான உளநிலையும் அத்தோடு வீட்டின் அமைதியும் ஒத்திசைவும் முக்கியமானவையாகும்.

(i) சாதாரண உளவியல் அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கு மேற்கொள்ளக்கூடிய **நான்கு** நடவடிக்கைகளைப் பெயரிடுக.

(ii) வீட்டின் அமைதியும் ஒத்திசைவும் வீழ்ச்சியுறுவதன் விளைவாக குடும்பத்தில் தெரியக்கூடிய **இரண்டு ஆரோக்கியமற்ற** குணங்குறிகளைக் குறிப்பிட்டு, அவற்றினால் தொடர்பாடலுடன் தொடர்புடையதாக உருவாகும் எதிர்விளைவுகளை விளக்குக.

(iii) உளம் மற்றும் வீட்டின் அமைதியில் பொழுதுபோக்கினால் உண்டாகும் விளைவுகளை **மூன்று** முக்கிய அம்சங்களின் அடிப்படையில் விவரிக்குக.

(iv) ஒரு நிறுவனத்தில் உள்ளக முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக நீங்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளீர்கள். அதன்பொருட்டு **நான்கு** பொதுசனத் தொடர்பு முறைகளைப் பிரேரித்து, அவற்றுள் **இரண்டை** விவரமாக விளக்குக.

* * *